[27th August 1970

Travelling Allowance

*17. *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the peon attached to Drugs Inspector, Thanjavur, has drawn more travelling allowance than his officer who is gazetted ; and

(*b*) if so, the reason therefor ?

பயணப்படி

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூரில் உள்ள மருந்து இன்ஸ்பெக்டருடன் (Drugs Inspector) இணைக்கப்பட்ட ஏவலர் (கடைநிலை ஊழியர்) அரசிதழ்ப் பதிவு பெற்ற தனது அதிகாரியைக் காட்டிலும் அதிகப் பயணப்படி பெற்றுள்ளார் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம் ; (இ) மருந்துச் சரக்குகள் ஆய்வாளர் குறிப்பிட்ட மாதப் பயணப்படியாக ரூபாய் 75/- மட்டும் பெறும்போது, அவரது சேவகர் தமிழ்நாடு பயணப்படி விதிகளின்படி பயணப்படி பெறுவதே அதற்குக் காரணம்.

திரு. சா. கணேசன் : அவர்கள் பெற்ற தொகை எவ்வளவு ? மொத்தம் அந்த ஆண்டில் பெற்றதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் ரூ. 77—75, மார்ச் மாதம் ரூ. 81—87, நவம்பர் மாதம் 1968-ல் ரூ. 82—20 என்று இருக்கிறது. ஆக இந்தத் தொகை ரூ. 82-க்கும் 83-க்கும் இடையில் உள்ளது.

Loans borrowed by farmers

*18. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government will take the responsibility of repaying the loans borrowed by the farmers for deepening irrigation wells and digging new wells in drought-affected areas in Tamil Nadu, particularly in Srivilliputhur and Sathur taluks during the last few years and thereby give relief to them ?

விவசாயிகள் வாங்கிய கடன்கள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :